சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.12.04.2023

OS.NO. 29/2021

PW1: ஆறுமுகம்

**குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1 ல் பிரதிவாதியின் பெயர் சாகுல் ஹமீது மனைவி பை ரோஜா என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வழக்கில் பிரதிவாதியின் பெயரை பை ரோஜா என்கிற பாத்திமா என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 லும் பிரதிவாதியின் பெயர் பை ரோஜா என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஒப்புகை அட்டையில் பாத்திமா என்று கையெழுத்திட்டுள்ளார். பாத்திமா என்ற நபரின் கணவர் பெயர் அப்துல் ரகுமான் என்றால் அது பற்றி தெரியாது. அப்துல் ரகுமானின் மனைவி பாத்திமா என்பவர் தான் பிரதிவாதி என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புரோ நோட்டில் 26.09.2018ம் தேதி பணம் பெற்று கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், இரண்டு தவணையாக கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் இரண்டு தவணையாக பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. 24.02.2018ம் தேதி அன்று பிரதிவாதி குளித்தலையில் வீட்டுமனை வாங்குவதற்காக ரூ. 1 லட்சம் வாங்கினார். 24.02.2018ம் தேதி பிரதிவாதியிடம் ஆவணம் எதுவும் எழுதி வாங்கிவில்லையா என்றால் கைமாத்தாக வாங்கியதால் வாங்கவில்லை. எனது அறிவிப்பில் 26.09.2020ம் தேதி அன்று பிரதிவாதி புரோ நோட்டு எழுதி கொடுத்தாக சொல்லியுள்ளது சரியா என்றால் சரியல்ல. வழக்குரையில் அறிவிப்பில் தேதி தவறுதலாக சொல்லப்பட்டுள்ளது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் பாத்திமா என்று கையெழுத்திட்டுள்ளது தான் அடிக்கப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி முதலில் பாத்திமா என்று கையெழுத்து

செய்துவிட்டு, பின்னர் தபால்காரர் கேட்டதனால் பைரோஜா என்று கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். வழக்கு தாக்கல் செய்யும் வரை வா.சா.ஆ.3 என் வசம் தான் இருந்தது என்றால் சரிதான். எனது வழக்கிற்கு சாதகமாக நானே வா.சா.ஆ.3ல் பாத்திமா என்று உள்ளதை அடித்துவிட்டு, பைரோஜா என்று கையொப்பம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. புரோ நோட்டு எழுதி கொடுக்கும் போது பிரதிவாதி எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் முத்திரை வில்லையின் மேல் ஒரு கையொப்பம் மற்றும் ஒரு கையெழுத்தும் செய்து கொடுத்தார். முதலில் கொடுத்ததாக சொல்லப்படும் ரூ. 1 லட்சம் பணம் பிரதிவாதி முதன் முதலாக எப்போது என்னிடம் கேட்டார் என்றால் பணம் கொடுப்பதற்கு ஒரிரு மாதங்கள் முன்பாக கேட்டார். எனக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் பழக்கம் கிடையாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 4 முத்திரை வில்லைகள் எதற்கு ஒட்டி உள்ளீர்கள் என்றால் அதிக தொகை என்றா 4 முத்திரை வில்லைகள் ஒட்ட வேண்டும் என்று கிராமத்தில் பேசி கொண்டார்கள். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும் போது மணி என்ன இருக்கும் என்றால் காலை 9 முதல் 11 மணிக்குள்ளாக இருக்கும். வா.சா.ஆ.1 ஆவணத்தை சிறுகாம்பூர் கிராமத்தில் உள்ள தாயுமான் லிங்கம் பட்டறையில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் தாயுமான் லிங்கம், கார்த்திக் ராஜா, வாழ்மால்பாளையத்தை சேர்ந்த ஆவணம் எழுதும் நபர் ஒருவரும், பிரதிவாதி, பிரதிவாதியின் கணவர் ஆகியோர்கள் இருந்தார்கள். 26.09.2018ம் தேதி கொடுக்கப்பட்ட பணம் ரூ. 1,50 லட்சம் வாங்கியிலிருந்து எடுக்கப்பட்டதா என்றால் கையில் இருந்ததை கொடுத்தேன். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டிற்கும் பிரதிவாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்கிவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு பைரோஜா என்ற பெயர் எதுவும் கிடையாது என்றால்சரியல்ல. பைரோஜா தான் பாத்திமா என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விலாசம் சரி என்தாலேயே பிரதிவாதி அறிவிப்பை பெற்று கொண்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதி ஒப்புதல் அட்டையில் பாத்திமா என்று கையொழுத்து செய்துள்ளார் என்றால்

சரியல்ல. கார்த்திக் ராஜா என்பவர் எனக்கு தெரிந்தவர் என்றால் சொந்தம் கிடையாது பழக்கம் உண்டு. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

/Signed/
ஆறுமுகம்

/Signed /
K.இன்பகார்த்திக்,B.A., L.L.M.,
சார்பு நீதிபதி, இலால்குடி